28 மார்ச் 2021

# Newbec

NEW WAY OF BEING CHURCH

குருத்து ஞாயிறு

**எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்**

மாதாந்திர கருப்பொருள்: **சமத்துவத்தைத் தொடக்கி வைத்தல்**

## நீங்கள் அங்கு இருந்தீர்களா?



இந்தப் பாடலைப் பலக் கலைஞர்கள் தங்களுடைய இசைக்கோர்வையில் இசைத்துள்ளார்கள். "நீங்கள் அங்கு இருந்தீர்களா?" மிகப்பழமையான இந்தப் பாடல் 1800 ஆம் ஆண்டுகளில் தோட்டப்பிண்ணனியில் இருப்போருக்காக இயற்றப்பட்டது. அடிமைத்தனமும் அவர்களின் சித்ரவதையும் சிலுவையில் அறையப்படுவதைப் போல கொடுமையானதாகவும் இருந்தது. அவர்களின் வாழ்க்கை எதிநோக்கு மற்றும் நற்செய்தியில் பிணைக்கப்பட்டிருந்தது. இந்தப் பாடல் நம்முடைய சொந்த மீட்பை நமக்கு நினைவூட்டுகிறது. "கிறிஸ்து அடிமை நிலையிலிருந்து நம்மை விடுவித்து, நமக்கு உரிமை வாழ்வை அளித்துள்ளார்; அதில் நிலைத்திருங்கள். மீண்டும் அடிமைத்தளை என்னும் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொள்ளாதீர்கள்"(கலாத்தியர் 5:1)

மிகவும் புனிதமிக்க ஆண்டவரின் பாடுகளின் ஞாயிறாக குருத்தோலை ஞாயிறு இதோ வந்துவிட்டது. வெற்றுக் கல்லறையைப் பார்த்து மகிழ்வதற்குமுன், கல்வாரியை நோக்கிச் செல்லும் குறுக்குச் சாலைகளிலேயே நாம் நின்றுவிடாமல், இயேசுவோடு இணைந்து வழிநடப்போம். 2000 ஆண்டுகளுக்கு முன் இயேசுவோடு நடக்க இயலாமல் போனாலும், அதே பாஸ்கா பேருண்மைகளை மீண்டும் புதுப்பித்துக் கொள்ள ஆண்டவரோடு இணைந்து நடப்போம்.

எசாயாவின் துன்புறும் ஊழியனின் மூன்றாவதுப் பாடலில் இவ்வாறு கூறுகிறார். "அவர் அன்பின் மிகுதியால் அனைத்துத் துன்பங்களையும் கீழ்ப்படிதலோடு ஏற்றுக்கொண்டார்" புனித பவுல் பிலிப்பியருக்கு எழுதிய கடிதத்தில் நமக்கு நினைவுப்படுத்துகின்றார். 'கிறிஸ்து தம்மையே முழுவதுமாக வெறுமையாக்கி, அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். அதுவும் சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திகொண்டார்"

ஏழைகளின் சிறிய சகோதரிகள் பொறுப்பேற்று நடத்தும் இல்லத்தில் உள்ள மருத்துவமனையில் அங்கிருக்கும் அருட்சகோதரிக்கு உதவியாக தன்னார்வலர் ஒருவர் உதவி செய்ய வந்தார். அங்கு பல ஆண்டுகளாக நோய்வாய்ப்பட்டு மிகவும் பரிதாபநிலையில் இருக்கும் ஒரு முதியவரைக் கண்டார். அப்போது அவர் அருட்சகோதரியிடம், 'இந்த முதியவர் துன்பப்படுவதை கடவுள் ஏன் அனுமதிக்கிறார்?' என்று கேட்டார்.

அதற்கு அருட்சகோதரி, 'அவருடைய துன்பம் இயேசுவோடு ஒன்றித்துள்ளது. இது ஒரு மீட்பாகும். இந்தத் துன்பங்களால், ஆன்மாக்களை மீட்க இயேசுவுக்கு அவர் உதவி செய்கிறார். கடவுளும் இந்தத் துன்பங்களைச் சகித்துக்கொள்ள அவருக்கு அருளைத் தருகிறார்' என்று கூறினார்.

இந்தத் துன்பங்கள், கிறிஸ்துவின் பாடுகளோடு தொடர்புடையது என்னும் வேறுபட்டப் பொருளை அந்தத் தன்னார்வலர் அன்றுப் புரிந்துகொண்டார். துன்பத்தால் ஆறுதல் பெறமுடியும் என்ற கத்தோலிக்க அணுகுமுறையை உலகுசார்ந்த பிற அணுகுமுறையால் தரமுடியாது. ஒருவேளை அந்த அடிமைகள் தங்கள் மீட்பின் துன்பங்களை உள்ளார்ந்த நிலையில் புரிந்துகொண்டிருக்கலாம்.

இந்தப் புனித வாரத்தில் நாம் ஆண்டவரோடு நெருக்கமாகப் பயணிப்போம். வெற்றி நம் பக்கமே; அதை நாம் உரிமை கோருவோம். நம் வாழ்க்கையில் என்ன நடந்தாலும், பாஸ்கா பேருண்மைகளின் வழியாக, கிறிஸ்துவோடு ஒன்றிணைவோம். சிலுவையில் அறையப்பட்ட இயேசுவே இவை அனைத்தையும் தந்தையிடம் கொண்டு செல்லட்டும். ஏனென்றால், தந்தை அவரை மாட்சிப்படுத்தும் நேரத்தில் நம்மையும் அவரோடு கூட்டிச்செல்ல, நம் இதயமாகிய கோவிலைத் தூய்மைப்படுத்த இயேசு விரும்புகிறார்.

நாம் அங்கு ஒன்றாய் இருப்போம் ✣

**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

"கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார்."

(Phil. 2: 6-8)

**இன்றைய வாசகங்கள்:**

மாற்கு: 11:1-10/ யோவான் 12: 12-16;
எசாயா: 50: 4-7
திருப்பாடல்: 21: 8-9, 17-20, 23-24
பிலிப்பியர் 2: 6-11
மாற்கு: 14: 1-15;47

INTERNAL CIRCULATION ONLY
BUL 13/2021

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org